



# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa | www.Aagaramuthalaa.com


விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

செவ்வாய், செப்டம்பர் 14.2021 | மலர்:09 இதழ்:09

# உயிர் பறிக்கும் நீட்-தொடரும் தற்கொலைகள்...

## நீட் தேர்விலிருந்து விலக்கு கோரும் மசோதா; முதல்வர் ஸ்டாலின் தாக்கல் செய்தார்

## 9 மாவட்ட உள்ளாட்சி தேர்தல்... தேதியை அறிவித்தார் மாநில தேர்தல் ஆணையர்



நீட் தேர்வுக்கு விலக்கு பெறும் வகையில் புதிய மசோதா தமிழக சட்டப்பேரவையில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என, எதிர்க்கட்சியாக இருந்தபோதே, திமுக வலியுறுத்தி வந்தது. இந்நிலையில், ஆட்சிப் பொறுப்புக்கு வந்த திமுக, ஓய்வுபெற்ற நீதிபதி ஏ. கே. ராஜன் தலைமையில், நீட் தேர்வு தாக்கங்கள் குறித்து ஆய்வு செய்ய குழு அமைத்தது. அக்குழு அரசிடம் அறிக்கை சமர்ப்பித்தது. இந்நிலையில், தமிழக சட்டப்பேரவையில் கடந்த ஆக.13 ம் தேதி பொது பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. 14 ம் தேதி வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து, பட்ஜெட் மீதான பொது விவாதம், பதிலுரை நடைபெற்றது. தொடர்ந்து, ஒவ்வொரு துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது.இந்நிலையில், நீட் தேர்வுக்கு விலக்கு பெறும் வகையில் புதிய மசோதா தமிழக சட்டப்பேரவையில் இந்த கூட்டத்தொடரிலேயே நிறைவேற்றப்படும் என, முதல்வர் ஸ்டாலின் கூறியிருந்தார். சட்டப்பேரவை கூட்டத்தொடரின் கடைசி நாளான செப்.13 நீட் தேர்வுக்கு விலக்கு பெறும் வகையில் புதிய மசோதாவை முதல்வர் ஸ்டாலின் அறிமுகம் செய்து தாக்கல் செய்தார்.அப்போது, "நீட் தேர்வை ஆரம்பம் முதலே திமுக அரசு எதிர்த்து வருகிறது. இந்த சட்டப்பேரவைக் கூட்டத்தொடரிலேயே அதற்கு விலக்கு பெறும் வகையில் புதிய மசோதா நிறைவேற்றப்படும் என உறுதியளித்தோம். பிளஸ் 2 மதிப்பெண் அடிப்படையில் சிறந்த மருத்துவர்களை தமிழகம் உருவாக்கியுள்ளது. பிளஸ் 2 மதிப்பெண் அடிப்படையிலேயே மருத்துவ மாணவர் சேர்க்கை நடைபெற வேண்டும். அதுதான் நியாயமான சேர்க்கையாக இருக்கும்" என்றார். இதனிடையே, நீட் தேர்வு தொடர்பாக, முதல்வர் ஸ்டாலின் — எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி இடையே விவாதம் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து, அதிமுக உறுப்பினர்கள் சட்டப்பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.






நீட் தேர்வில் இரு முறை தோல்வியை கண்ட மேட்டூரை அடுத்த கூலையூரைச் சேர்ந்த மாணவன் தனுஷ் 12.09.2021 நீட் தேர்வு எழுத இருந்த நிலையில் தேர்வு பயத்தால் தற்கொலை செய்து கொண்டதாக காவல்துறை தெரிவிக்கிறது.சேலம் மாவட்டம் மேட்டூரைச் அடுத்த கூலையூரைச் சேர்ந்த பி.வி.சி பைப் தயாரிக்கும் தனியார் கம்பெனி ஆபரேட்டர் சிவகுமார் இவரது மனைவி ரேவதி இவர்களுக்கு நிஷாந்த், தனுஷ் என இரு மகன்கள் உள்ளனர்.நிஷாந்த் தனியார் கல்லூரியில், பொறியியல் இரண்டாம் ஆண்டு படித்து வருகிறார்.தனுஷ் மேட்டூர் மாசிலாபாளைத்தில் உள்ள தனியார் பள்ளியில் பிளஸ் டூ படித்து முடித்துவிட்டு, தொடர்ந்து நீட் தேர்வு எழுதினார் ஆனால் இரு முறை நீட் தேர்வு எழுதியும் தோல்வி அடைந்துள்ளார். அரியலூர் மாவட்டத்தில் உள்ளது துளாரங்குறிச்சி கிராமம். இந்த கிராமத்தைச் சேர்ந்தவர் கருணாநிதி. இவர் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறார். இவரது மகள் கனிமொழி. இவர், நாமக்கல்லில் உள்ள பள்ளியில் படித்துள்ளார். கனிமொழி தனது 12 ஆம் வகுப்பில் 562.28 மதிப்பெண் பெற்று 93 சதவீத மதிப்பெண்களை பெற்றுள்ளார். மருத்துவப் படிப்பில் சேர வேண்டும் என்ற நோக்கத்தில், அதற்காக கனிமொழி தயாராகி வந்துள்ளார். இந்த நிலையில், தஞ்சாவூரில் உள்ள தனியார் பள்ளி ஒன்றில் கனிமொழி நீட் தேர்வை எழுதினார். தேர்வு எழுதி முடித்த பிறகு வீட்டிற்கு வந்த கனிமொழி தனது தந்தையுடன் இருந்துள்ளார். பின்னர், நேற்று மாலை யாரும் எதிர்பாராத விதமாக மாணவி கனிமொழி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். நீட் தேர்வு எழுதி வந்த பிறகு நீட் தேர்வில் தோல்வியடைந்து விடுவோமோ என்ற அச்சத்தில் மாணவி கனிமொழி காணப்பட்டுள்ளார்.அந்த பயத்தின் காரணமாகவே கனிமொழி தற்கொலை செய்து கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. மருத்துவ படிப்புக்கு நுழைவுத்தேர்வு எழுதிவந்த மாணவி கனிமொழி, சடலமாக தூக்கில் தொங்கிக் கொண்டிருப்பதை கண்ட அவரது பெற்றோர்கள் அதிர்ச்சியிலும், சோகத்தில் கதறி அழுதனர். பின்னர், உடனடியாக இந்த தகவல் போலீசாருக்கு தெரிவிக்கப்பட்டு அவரது உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. இதுதொடர்பாக. வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரித்து வருகின்றனர். கனிமொழியில் இறுதிச்சடங்கிற்காக அவரது உடல் சொந்த ஊரான சாத்தாம்பாடிக்கு கொண்டு செல்லப்பட்டது. சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர் தனுஷ் நேற்று நீட் தேர்வு அச்சத்தினால் தற்கொலை செய்துகொண்ட சோகம் அகலாத நிலையில், தற்போது மேலும் ஒரு மாணவி தற்கொலை செய்து கொண்டிருப்பது மக்கள் மத்தியில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. நீட் தேர்வு தோல்வியால் மனமுடைந்து தற்கொலை செய்துகொண்ட மாணவி அனிதாவும் அரியலூரைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. நீட் தேர்வு காரணமாக அரியலூரில் மட்டும் இரு மாணவிகள், ஒரு மாணவர் தற்கொலை செய்து கொண்டிருப்பது அம்மாவட்ட மக்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் இடையே மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

## தமிழக சட்டப்பேரவை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பு



தமிழக சட்டப்பேரவையில் கடந்த ஆக.13 ம் தேதி பொது பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. 14 ம் தேதி வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து, பட்ஜெட் மீதான பொது விவாதம், பதிலுரை நடைபெற்றது. கடந்த 23 ம் தேதி முதல் ஒவ்வொரு துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது. இதில், துறை சார்ந்த அமைச்சர்கள் பதிலளித்து, பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிட்டனர். முதல்வர் மு. க. ஸ்டாலினும் சட்டப்பேரவை விதி எண் 110 ன் கீழ் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார். இதனிடையே, கோடநாடு விவகாரம், விழுப்புரம் ஜெயலலிதா பல்கலைக்கழகம் தொடர்பாக பல்வேறு விவகாரங்களில் சட்டப்பேரவையில் திமுக — அதிமுக இடையே விவாதம் ஏற்பட்டது. சிஏஏவுக்கு எதிராகத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. அப்போது, அதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். இந்நிலையில் செப் 13 மூன்று நாள் விடுமுறைக்குப் பின் சட்டப்பேரவை மீண்டும் கூடியது. சட்டப்பேரவை கூட்டத்தொடரின் கடைசி நாளான இன்று நீட் தேர்வுக்கு விலக்கு கோரும் மசோதாவை முதல்வர் ஸ்டாலின் தாக்கல் செய்தார். இந்தத் தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது. இந்நிலையில், தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

## 9 மாவட்டங்களில் அமலுக்கு வந்தது தேர்தல் நடத்தை விதிமுறை



தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் பழனிகுமார் நேற்று 13.09.2021 மாலை 05.00 மணிக்குச் செய்தியாளர்களைச் சந்திக்கவுள்ளார். தமிழ்நாட்டில் ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாத செங்கல்பட்டு,காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, நெல்லை, தென்காசி, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை ஆகிய 9 மாவட்டங்களிலும் ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடத்த மாநில தேர்தல் ஆணையம் தீவிரம் காட்டிவரும் நிலையில், இந்த மாவட்டங்களில் தேர்தல் வாக்குப்பதிவு தொடர்பாக மாநில தேர்தல் ஆணையர் செய்தியாளர் சந்திப்பின்போது அறிவிக்க உள்ளதாக முன்னரே செய்தி வெளியாகியிருந்தது. இந்நிலையில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் பழனிகுமார் செய்தியாளர்களைச் சந்தித்தார். அவரது அறிவிப்பு பின்வருமாறு, தமிழகத்தில் விடுபட்ட 9 மாவட்டங்களுக்கு 2 கட்டங்களாக உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும். அக்டோபர் 6 மற்றும் 9 தேதிகளில் தேர்தல் நடைபெறும். 9 மாவட்டங்களுக்கான உள்ளாட்சித் தேர்தல் வாக்கு எண்ணிக்கை அக்டோபர் 12 ஆம் தேதி நடைபெறும் . உள்ளாட்சித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளை தொடங்குகிறது. வேட்புமனு கடைசி நாள் செப் 22 வேட்புமனு மீதான பரிசீலனை செப்23 ஆம் தேதி நடைபெறும். வேட்புமனுவைத் திரும்பப் பெற செப்25 வரை அவகாசம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நீட் தற்கொலை... மாணவர் குடும்பத்திற்கு

## அதிமுக நிவாரணம் அறிவிப்பு!



மேட்டூர் அருகே கடைசி வாய்ப்பிலும் நீட் தேர்வில் தோல்வி அடைந்தால் மருத்துவர் ஆகும் கனவு கானல் நீராகி விடுமோ என்ற மன அழுத்தத்தால், விவசாயியின் மகன் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் சோகத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே உள்ள கூழையூரைச் சேர்ந்தவர் சிவகுமார், விவசாயி. இவருடைய மகன் தனுஷ் வயது 19 மேட்டூரில் உள்ள ஒரு தனியாாப் பள்ளியில் கடந்த 2019 ஆம் ஆண்டு பிளஸ்2 முடித்தார் . கடந்த இரண்டு முறை நீட் தேர்வு எழுதியும் அதில் தோல்வி அடைந்திருந்தார். அதனால் ஏமாற்றம் அடைந்த தனுஷ், மூன்றாவது மற்றும் கடைசி வாய்ப்பாக நடக்கும் நீட் தேர்வுக்காகக் கடுமையாக படித்து வந்தார். இந்நிலையில் நீட் தேர்வு நடைபெற்ற நாளான நேற்று தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள இந்த சம்பவம் தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சியினரும் தங்களது கருத்துக்களையும், இரங்கல்களையும் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் மாணவர் தனுஷின் குடும்பத்திற்கு அதிமுக சார்பில் 10 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என அதிமுக தலைமை அறிவித்துள்ளது. இதுதொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள அதிமுகவின் தலைமை ஒருங்கிணைப்பாளர்கள் ஓபிஎஸ் —இபிஎஸ் ஆகியோர், உயிரிழந்த மாணவர் தனுஷின் குடுப்பதிற்கு அரசு 1 கோடி ரூபாய் நிதியுதவியும் அரசு பணியும் வழங்கவேண்டும். எந்த துயரம் வந்தாலும் மாணவர்கள் போராட்ட குணத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். பெற்றோர்களுக்குக் காலமெல்லாம் மறக்கவே முடியாத துயரத்தை மாணவர்கள் வழங்கிவிடக்கூடாது. மாணவர் தனுஷின் குடும்பத்திற்கு அதிமுக சார்பில் 10 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும்'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அண்ணா பல்கலை. ஆட்சி மன்றக்குழு உறுப்பினராக

# எம். எல். ஏ உதயநிதி நியமனம்.!



புகழ் பெற்ற அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினராக சட்டமன்ற உறுப்பினர் உதயநிதி ஸ்டாலின் நியமிக்கப்பட்டுள்ளார். அவர், அலுவல் சாரா உறுப்பினராக மூன்று ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல் , அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினராக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச் செல்வனும் நியமிக்கப்பட்டுள்ளார். கோவை மாவட்டத்தில் உள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்களாக சட்டமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கணேஷ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தமிழ்நாடு சபாநாயகர் அப்பாவு அறிவித்துள்ளார்.

## தன் மீதான பாலியல் குற்றச்சாட்டிற்கு சீமானின் பதில் என்ன?

# ஜோதிமணி எம்.பி. சரமாரி கேள்வி!



காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கரூர் தொகுதியின் மக்களவை உறுப்பினர் ஜோதிமணி தனது அதிகாரப்பூர்வ ட்விட்டர் பக்கத்தில், "பொதுவெளியில் 'யாரும் செய்யாததையா ராகவன் செய்துவிட்டார்' என்று பா. ஜ. க. ராகவனின் பாலியல் குற்றத்தைச் சிறிதும் வெட்கமின்றி ஆதரிக்கும் சீமான் எனது கேள்விகளுக்கு நேரடியாக பதில் சொல்ல முடியாமல் தான் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்காக நான் பேசுவதாக சொல்கிறார். பாலியல் குற்றம் சாட்டப்பட்டவர்களை, பாலியல் குற்றவாளிகளை ஆதரிப்பவர்களை தட்டிக்கேட்க பதவி எதுவும் தேவையில்லை. மேலும் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவி என்பது சீமான் போன்ற மலிவான, அரசியல் வாதிகளை விமர்சிப்பதன் மூலம் கிடைக்கக் கூடியதல்ல. பெருந்தலைவர் காமராசர் வகித்த மாபெரும் பொறுப்பு. சீமான் நேரடியாக பதில் சொல்ல வேண்டிய எளிய கேள்விகள் பாலியல் குற்றவாளியான கே. டி. ராகவனை ஏன் ஆதரிக்கிறார்? பாலியல் குற்றவாளிகளின் புகலிடமான பா. ஜ. க. வை ஆதரிக்க வேண்டிய தேவை என்ன?பா. ஜ. க. வின் 'ய' டீம் இல்லையெனில் ஏன் ஆதரிக்கிறார்? தன் மீதான பாலியல் குற்றச்சாட்டிற்கு சீமானின் பதில் என்ன?" என்று அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பியுள்ளார்.

# எப்படி இருந்தது நீட் தேர்வு? மாணவ, மாணவிகள் சொல்வது என்ன?



எம்.பி.பிஎஸ்., பி.டி.எஸ், ஆகிய இளநிலை மருத்துவப் படிப்புகளில் சேர நீட் எனப்படும் தேசிய தகுதி நுழைவுத்தேர்வில் வெற்றி பெறுவது அவசியம். இந்த ஆண்டுக்கான நீட் தேர்வு நாடு முழுவதும் ஞாயிற்றுக்கிழமை12.09.2021 நடைபெற்றது. இந்தியா முழுவதும் 16.14 லட்சம் பேரும், தமிழ்நாட்டில் மட்டும் 1.10 லட்சம் பேரும் இத்தேர்வை எழுதினர். தமிழ் உள்ளிட்ட 13 மொழிகளில் நீட் தேர்வு நடந்தது. சேலம் மாவட்டத்தில் மொத்தம் 28 மையங்களில் 15,067 பேர் தேர்வு எழுதினர். இந்த ஆண்டு மொத்தம் 200 வினாக்கள் கொடுக்கப்பட்டு, அவற்றில் 200 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தது. நீட் தேர்வு எப்படி இருந்தது என்பது குறித்து சேலம் சக்தி கைலாஷ் கல்லூரி மையத்தில் தேர்வு எழுதிய மாணவ, மாணவிகளிடம் பேசினோம். தர்மபுரி மாவட்டம் வெண்ணாம்பட்டியைச் சேர்ந்த மாணவி ரக்ஷிதா, தனியார் பள்ளியில் படித்துவந்தவர். முதன்முறையாக நீட் தேர்வை எழுதியுள்ளார். அவர் கூறுகையில், உயிரியல், தாவரவியல் பாடப்பகுதிகளில் இருந்து கேட்கப்பட்ட வினாக்கள் ரொம்பவே எளிமையாக இருந்தன. வேதியியல் பகுதிக்கான வினாக்கள் ஓரளவு பரவாயில்லை என்று சொல்லலாம். ஆனால், இயற்பியல் பகுதி வினாக்கள் மிக கடினமாக இருந்தன. இயற்பியல் சம்பந்தப்பட்ட வினாக்கள் நீள நீளமாக கேட்கப்பட்டிருந்தன. கேள்வியைப் படித்து உள்வாங்கிக் கொள்ளவே பத்து நிமிடங்கள் தேவைப்பட்டது,'' என்றார். கிருஷ்ணகிரியைச் சேர்ந்த பரத்குமார் என்ற மாணவர், அங்குள்ள அரசு மாதிரி பள்ளியில் படித்துவந்தவர். முதல்முறையாக நீட் தேர்வை எதிர்கொண்டுள்ள அவர் கூறுகையில், ''எங்கள் பள்ளியில் ஆரம்பத்தில் இருந்தே நீட் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்தினர். கரோனா ஊரடங்கின்போது ஆன்லைன் மூலம் பயிற்சி அளித்தனர். பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டது, இத்தேர்வை எதிர்கொள்ள உதவியாக இருந்தது. இந்த தேர்வில் இயற்பியல் பகுதி மட்டும் கடினமாக இருந்தது. சில வினாக்கள் டிவிஸ்ட் செய்து கேட்டிருந்தனர்,'' என்றார். சேலம் மாவட்டம் ஏத்தாப்பூரைச் சேர்ந்த ஷாலினி, அரசுப் பள்ளியில் படித்தவர். முதன்முறையாக இத்தேர்வை எழுதியுள்ளார். அவர் கூறும்போது, ''இயற்பியல் பாடப்பகுதியில் இருந்து கேட்கப்பட்ட வினாக்கள் சில, கணக்கீடு அடிப்படையில் இருந்ததால் கொஞ்சம் சவாலாக இருந்தது. சில வினாக்கள் குழப்பும் வகையிலும் இருந்தன . மற்ற பாடப்பகுதி வினாக்கள் ஓரளவு எளிமையாக இருந்தன. சிபிஎஸ்இ பாடத்திட்டத்தில் படித்த மாணவ, மாணவிகளுக்கு இந்த நீட் தேர்வு எளிமையாக இருக்கும். எங்களைப் போன்ற அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் சிபிஎஸ்இ பாடத்திட்டத்திற்கு

கொண்டு வந்தால், எதிர்காலத்தில் தமிழக அரசுப் பள்ளி மாணவர்களும் அதிகளவில் இத்தேர்வில் வெற்றி பெற வாய்ப்புள்ளது,'' என்றார். சேலத்தைச் சேர்ந்த ஸ்ரீராம், தனியார் பள்ளி மாணவர். முதன்முறையாக நீட் தேர்வை எழுதியுள்ளார். அவர் கூறுகையில், ''இயற்பியல் பகுதி வினாக்கள் மிகக்கடினமாக இருந்தன. வேதியியல் பிரிவு ஓரளவு பரவாயில்லை. உயிரியல் பகுதி வினாக்கள் எளிமையாக இருந்தன. இந்த வினாத்தாள் அடிப்படையில் பார்த்தால், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இத்தேர்வு கடினமாகத்தான் இருந்திருக்கும்,'' என்றார். தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு என்பது குறிப்பிட்ட பாடத்திட்டத்தில் படித்தவர்களுக்கு மட்டும் முக்கியத்துவம் அளித்து நடத்தப்படாமல், மாநிலப் பாடத்திட்டத்தில் படித்தவர்களுக்கும் சம வாய்ப்பு அளிக்கும் வகையில் வினாத்தாள் வடிவமைப்பு இருக்க வேண்டும் என்கிறார்கள் பெற்றோர்கள்.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

அகர முதல
தொடர்புக்கு
9597887847
8870884969
aagaramuthala@gmail.com
Aagaramuthalaa
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

GoLAAH TRAVELS
முன்பதிவிற்கு
9490547783
8870884969
கார் வாங்க/ விற்க வேண்டுமா?. இப்போது 50-க்கும் மேற்பட்ட கார்கள் உடனுக்குடன்!
எங்களிடம் 24 நேரமும் கார் வாடகைக்கு மிகக்குறைந்த விலையில்
அகர முதல டிஜிட்டல் பிரிண்டர்ஸ்
Aagaramuthalaa | தொடர்புக்கு 9597887847 / 8870884969

அகர முதல
மின்னிதழ்
Aagaramuthalaa | www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

## மயிலாடுதுறையில் தேசிய ஊட்டச்சத்து மாத விழா மற்றும் பராம்பரிய உணவு கண்காட்சியினை

# மாவட்ட ஆட்சியர் லலிதா தொடங்கி வைத்தார்



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தேசிய ஊட்டச்சத்து மாத விழா மற்றும் பராம்பரிய உணவு கண்காட்சியினை மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா தொடங்கி வைத்து பார்வையிட்டார். மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தேசிய ஊட்டச்சத்து மாத விழா மற்றும் பராம்பரிய உணவு கண்காட்சியினை மாவட்ட ஆட்சியர் இரா. லலிதா பழம், காய்கறிகளால் உருவாக்கப்பட்ட குத்துவிளக்கினை ஏற்றி வைத்து தொடங்கி வைத்தார். தேசிய ஊட்டச்சத்து மாத விழாவில் ஊட்டசத்து உணவின் அவசியம் பதாகைகள் வைக்கப்பட்டிருந்ததையும், கோலங்கள் வரையப்பட்டுள்ளதையும் மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார். பின்னர் குழந்தைகளுக்கு மரக்கன்றுகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.தொடர்ந்து ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப்பணிகளில் உள்ள அங்கன்வாடி பணியாளர்களால் அமைக்கப்பட்ட ஊட்டச்சத்து உணவு கண்காட்சியினை தொடங்கி வைத்து மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார்.பின்னர் தேசிய ஊட்டச்சத்து மாத விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை முதல் கையெழுத்திட்டு மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார். இதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் தலைமையில் அங்கன்வாடி பணியாளர்கள் போஷன் அபியான் திட்டம் குறித்து உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். நிறைவாக மாவட்ட ஆட்சியர் தேசிய ஊட்டச்சத்து மாத விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது, தேசிய ஊட்டச்சத்து மாத விழா ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஊட்டச்சத்து மாத விழாவில் போஷன் அபியான் திட்டம் குறித்து முழுமையாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. போஷன் அபியான் திட்டம் என்பது மத்திய மற்றும் மாநிலஅரசால் இணைந்து செயல்படுத்தப்படும் திட்டம் ஆகும். இத்திட்டமானது மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான திட்டமாகும். இதில் குழந்தைகளுக்கு தீவிர ஊட்டச்சத்து குறைபாடு, குள்ளத்தன்மை 12 எடைக்குறைவு, இரத்தசோகை இவற்றை குறைக்க மற்றும் தாய்ப்பால் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. மயிலாடுதுறை மாவட்டத்தில் 692 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு 2 கர்ப்பிணி பெண்கள், வருகிறது. இம்மையங்கள் மூலம் 39,33,5733 தாய்மார்கள், ஆயிரத்து பாலுட்டும் குழந்தைகள் 295,43 ஆறு வயதிற்குட்பட்ட ஆகியோர் பயன்பெற்று வருகிறார்கள். ஊட்டச்சத்து குறைபாடு இல்லா சமுதாயத்தை உருவாக்க அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்பட வேண்டும். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட பணிகள் வழங்கும் விழிப்புணர்வை முழுமையாக பெற்று வேண்டும் ஒவ்வொரு குடும்பமும் ஆரோக்கிய வாழ்வை வாழ என மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சோ.முருகதாஸ், வளர்ச்சி குழந்தைகள் அலுவலர் ஒருங்கிணைந்த (பொறுப்பு) திட்ட அலுவலர் பழனி, வட்டார அலுவலர்கள் திட்ட குழந்தைகள் வளர்ச்சி சாந்தி, சித்ரா, வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட பல்வேறு அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தடுப்பூசி பற்றாக்குறையால் இலக்கை எட்டாமல் போன மயிலாடுதுறை மாவட்டம்..!



மயிலாடுதுறை மாவட்டத்தில் நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமில் 41,235 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது. மயிலாடுதுறை மாவட்டத்தில் போதிய அளவில் கொரோனா தடுப்பூசிகள் உள்ளதால் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் கொரோனா தடுப்பூசி தொடர்ந்து செலுத்தப்படும் என மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா தெரிவித்துள்ளார். நாடுமுழுவதும் கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா தொற்றின் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் கோடிக்கணக்கான மக்கள் இந்த தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள தடுப்பூசி ஒன்றே தீர்வு என மத்திய மாநில அரசு முழுவீச்சில் தடுப்பூசி செலுத்தும் பணியில் தீவிரம் காட்டி கோவாக்ஸின், கோவிஷீல்டு என்ற இரண்டு தடுப்பூசிகளை பொதுமக்களுக்கு அந்தந்த மாநில அரசுகள் மூலமாக வழங்கி பொதுமக்களுக்கு செலுத்தி வருகின்றது. அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் மாவட்டங்கள் தோறும் சுகாதாரத்துறை சார்பில் அனைத்து தரப்பு மக்களுக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது தமிழ் நாட்டில் மூன்றாவது அலை பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் 18 வயதிற்கு மேல் உள்ள அனைவருக்கும் தடுப்பூசி செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் அரசு அதிவேகமாக தடுப்பூசிகளை பொதுமக்களுக்கு செலுத்தி வருகிறது. அதனையடுத்து மயிலாடுதுறை மாவட்டத்தில் 50 ஆயிரம் நபர்களுக்கு கொரோனா தடுப்பு ஊசி செலுத்த இலக்கு நிர்ணயித்து தடுப்பூசி முகாகளை அமைத்து தடுப்பூசி செலுத்தினர். காலை 7 மணி முதல் இரவு 7 மணிவரை 12 மணிநேரம் அனைத்து பகுதிகளிலும் மாபெரும் தடுப்பூசி முகாம்நடைபெறும் என்றும், ஒரே நாளில் மட்டும் 50 ஆயிரம் தடுப்பூசி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதற்காக மாவட்டம் முழுவதும் ஐந்து ஒன்றியங்களில் ஊராட்சிகள், இரண்டு நகராட்சிகளில் 22 இடங்கள், 4 பேரூராட்சிகளில் 24 இடங்கள், 31 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், 6 மருத்துவமனைகள் 10 நடமாடும் தடுப்பூசி குழுக்கள் என மொத்தம் 499 இடங்களில் முகாம் அமைக்கப்பட்டு தடுப்பூசி செலுத்தியது. இந்நிலையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமில் 50 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி செலுத்த முதலில் திட்டமிட்டு அது குறித்து மக்களுக்கு பல்வேறு விளம்பர அறிவிப்புகள் செய்யப்பட்டன. இந்த எண்ணிக்கை தடுப்பூசி வரத்து குறைவு காரணமாக கடைசி நேரத்தில் மாற்றப்பட்டு, 30000 ஆக இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதையடுத்து, மாவட்டம் முழுவதும 499 இடங்களில் முகாம் அமைக்கப்பட்டு தடுப்பூசி செலுத்தப்பட்டது. முகாமின் முடிவில் 41,235 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. முன்னதாக, மயிலாடுதுறை மாவட்டத்தில் தரங்கம்பாடி, சீர்காழி உள்ளிட்ட தாலுக்காவில் உள்ள ஒருசில கிராமங்களில் தடுப்பூசி பற்றாக்குறை காரணமாக தடுப்பூசி செலுத்திக் கொள்ள வந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர். இந்நிலையில், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் லலிதா வெளியிட்ட செய்திக்குறிப்பில், மயிலாடுதுறை மாவட்டத்துக்கு 25 ஆயிரம் கொரோனா தடுப்பூசிகள் வர இருப்பதால் பொதுமக்கள் தடுப்பூசி இருப்பு குறித்து அச்சப்படத் தேவையில்லை என்றும், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் கொரோனா தடுப்பூசி தொடர்ந்து செலுத்தப்படும் என தெரிவித்துள்ளார்.

## மயிலாடுதுறை மாவட்டத்தில் 3 மாணவர்கள் உட்பட 4 பேருக்கு கொரோனா



மயிலாடுதுறை மாவட்டத்தில் மூன்று பள்ளி மாணவர்களுக்கும் ஒரு பள்ளி முதல்வருக்கும் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இருப்பினும் கொரோனா பரவலின் விகிதம் மிகவும் குறைவாக உள்ளதால், பள்ளி வழக்கம் போல செயல்பட சுகாதார துறையினர் அனுமதித்துள்ளனர். மயிலாடுதுறை தனியார் மெட்ரிக். பள்ளி மாணவருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்ட நிலையில், பள்ளி முதல்வருக்கும் தொற்று பாதிப்பு உறுதியாகியுள்ளது. மயிலாடுதுறையில் உள்ள தனியார் மெட்ரிக், பள்ளியின் 12 ஆம் வகுப்பு மாணவருக்கு இருமல், காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் இருந்துள்ளது. அதனையடுத்து மாணவருக்கு பரிசோதனை செய்யப்பட்டது. இதில், அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானது. இதையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பள்ளி நிர்வாகத்தின் சார்பில் அந்த மாணவருடன் தொடர்பில் இருந்த சக மாணவர்கள், பள்ளி முதல்வர், ஆசிரியர்கள் உள்ளிட்ட 57 பேருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவுகள் வெளியானதில், பள்ளி முதல்வருக்கு மட்டும் கொரோனா வைரஸ் தொற்று இருந்தது தெரியவந்தது. இதேபோல, மயிலாடுதுறை நகரில் உள்ள அரசுப்பள்ளி ஒன்றில் பயிலும் 11 ஆம் வகுப்பு மாணவருக்கும் அண்மையில் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டது. இதையொட்டி, அவ்வகுப்பில் பயிலும் அனைத்து மாணவர்கள் மற்றும் ரேண்டம் அடிப்படையில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் 117 பேருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில், மற்ற யாருக்கும் தொற்று கண்டறியப்படவில்லை. அதனால் அப்பள்ளியும் வழக்கம் போல் செயல்படுகிறது.மேலும் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியை அடுத்த ஆயங்குடி பள்ளம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர் ஒருவருக்கு பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியானது. அதனைத் தொடர்ந்து சக மாணவர்களிடம் பரிசோதனை செய்ததில் யாருக்கும் மற்ற மாணவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டாததால் அப்பள்ளியும் தொடர்ந்து செயல்பட சுகாதார துறையினர் அனுமதித்துள்ளனர்.

## வைத்தீஸ்வரன்கோயிலில் கொடி மரத்திற்கு குடமுழுக்கு.!




மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே வைத்தீஸ்வரன் கோவிலில் தருமபுரம் ஆதீனத்துக்கு சொந்தமான தையல்நாயகி அம்மன் வைத்தியநாதசாமி கோவில் உள்ளது. இந்த கோவில், நவக்கிரகங்களில் செவ்வாய்க்கு அதிபதியான அங்காரகன், தன்வந்திரி சுவாமிகள் அருள்பாலிக்கின்றனர். கோவிலில் வைத்தியநாதர் சன்னதி எதிரே உள்ள கொடிமரத்துக்கு தங்கத்தகடுகள் பதிக்க தஞ்சை சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலைக்கழகம் சார்பில் 5 கிலோ தங்கம் காணிக்கையாக வழங்கப்பட்டது. இந்த தங்ககட்டிகள் தகடுகளாக மாற்றும் வகையிலான பணிகள் தொடங்கி நடந்து வந்த நிலையில் கொடிமரத்துக்கு தங்க ரேக்குகள், அடிப்பகுதி தாமரை வடிவிலான பத்ம பீடம் ஆகியவை தயார் செய்யப்பட்டு அவை கொடிமரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பின்னர் தங்க தகடுகள் பொருத்தப்பட்ட கொடிமரத்துக்கு காலை குடமுழுக்கு நடந்தது. முன்னதாக 2 கால யாகசாலை பூஜைகள் நேற்று தொடங்கி நடந்தது. தொடர்ந்து இரண்டாம் கால யாகசாலை பூஜைகள் முடிவடைந்து, பூர்ணாஹுதி, தீபாராதனை நடந்தது. தொடர்ந்து புனிதநீர் அடங்கிய கடங்கள் மேள, தாளங்களுடன் புறப்பட்டு கோவிலை வலம் வந்து தருமபுரம் ஆதீனம் முன்னிலையில் கொடிமரத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு குடமுழுக்கு நடந்தது.

அகர முதல
WE ARE HIRING!!!
வேலைக்கு ஆட்கள் தேவை
பிரபல பிரிண்டிங் நிறுவனத்திற்கு அலுவலக பணிக்கு ஆட்கள் தேவை..
இடம்:மயிலாடுதுறை
தொடர்புக்கு..
9597887847
விளம்பர தொடர்புக்கு
8870884969

### மயிலாடுதுறை அருகே மாற்றுத்திறனாளியிடம்

# 2000 லஞ்சம்-தனி வட்டாட்சியர் கைது.!

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி அருகே காரைமேடு கிராமத்தை சேர்ந்தவர் 61 வயதான ராமச்சந்திரன், இவரது மனைவி தையல்நாயகி, மாற்று திறனாளியான இவருக்கு மாற்று திறனாளி சான்று வழங்கி உதவி தொகை கோரி தரங்கம்பாடி தாலுகா அலுவலகத்தில் உள்ள சமூக பாதுகாப்பு தனி தாசில்தார் பாலமுருகனிடம் விண்ணப்பித்து இருந்தார். அதற்கு 2000 ரூபாய் லஞ்சம் தர வேண்டும் என்று சமூக பாதுகாப்பு நலத்துறை தனி தாசில்தார் பாலமுருகன் கேட்டுள்ளதாக கூறப்படுகிறது. லஞ்சம் கொடுக்க மனம் இல்லாததால் இதுகுறித்து நாகை லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் ராமச்சந்திரன் புகார் மனு கொடுத்தார். புகாரை பெற்று கொண்ட நாகை லஞ்ச ஒழிப்பு துறை துணை சூப்பிரண்டு சித்திர வேலு தலைமையில் லஞ்சம் ஒழிப்பு துறை போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் ரமேஷ் குமார், அருள்மொழி மற்றும் போலீசார் அடங்கிய குழுவினர் தரங்கம்பாடி தாசில்தார் அலுவலகத்திற்கு மாறு வேடத்தில் வந்தனர். அப்போது ராமச்சந்திரனிடம் போலீசார் ரசாயன பவுடர் தடவிய ரூபாய் 2 ஆயிரத்தை கொடுத்து அனுப்பி ரகசியமாக கண்காணித்தனர். அதனைத் தொடர்ந்து பணத்தை பெற்று கொண்ட தனி தாசில்தார் பாலமுருகனை மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீஸார் கையும் களவுமாக பிடித்தனர். மேலும் இச்சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து பாலமுருகனை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். நல்ல உடல்நிலை உள்ளவர்கள் ஏதேனும் ஒரு வகையில் தங்களுக்கான வாழ்வாதாரத்திற்கு வருவாயினை உருவாக்கி கொள்கின்றனர். ஆனால் உடலளவில் குறைபாடு உள்ள மாற்றுத்திறனாளிகள் தங்களுக்கான வாழ்வாதாரத்திற்கான வருவாய் என தேட முடியாத சூழலில் அரசு அவர்களுக்கு உதவித்தொகையினை வழங்கி வருகிறது. அந்த உதவி தொகையினை பெறுவதற்கு அரசு வழிவகை செய்தாலும் அதனைப் பெறுவதற்கு அதிகாரிகள் பெறும் முட்டுக்கட்டைகளாக இருந்து வருகின்றனர். அவர்களின் நிலையை சற்றும் மனதில் கொள்ளாமல் அவர்களிடம் லஞ்சம் கேட்டு அவர்களை அலைக்கழிப்பதும், இடம் லஞ்சம் பெற்று உதவித்தொகை வழங்கி வருவதும் தொடர்கதையாக இருந்து வருகிறது. பலரும் இதுதொடர்பாக அவர் அளிக்க தயங்கி தங்களுக்கு காரியம் நடந்தால் போதும் என லஞ்சம் கேட்கும் அதிகாரிகளுக்கு அவர்கள் கேட்கும் நிறைஞ்ச தொகையை கொடுத்து விடுகின்றனர். இதற்கு அப்பாற்பட்டு ஒரு சிலர் மட்டும் லஞ்சம் கொடுக்க மனமின்றி, இதுகுறித்த புகாரினை லஞ்ச ஒழிப்புத் துறை யினருக்கு தகவல் அளிக்கின்றனர். இனிவரும் காலங்களில் லஞ்சம் கேட்கும் அதிகாரிகள் குறித்து அனைவரும் புகார் தெரிவித்தால் மட்டுமே இதுபோன்ற நிகழ்வினை தடுக்க முடியும் என சமூக ஆர்வலர்கள் பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

## மயிலாடுதுறை: 37 இடங்களில் வைக்கப்பட்ட விநாயகர் சிலைகள் நீர்நிலைகளில் கரைப்பு..



மயிலாடுதுறை மாவட்டத்தில் 37 இடங்களில் வைக்கப்பட்ட விநாயகர் சிலைகள் நீர்நிலைகளில் கரைக்கப்பட்டன.கொரோனா பரவல் தடுப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டு விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாட அரசு அனுமதி அளித்திருந்தது. அதிகபட்சம் 2 அடி உயரம் உள்ள விநாயகர் சிலைகளை வைத்து அனுமதிக்கப்பட்ட இடங்களில் மட்டும் வழிபாடு நடத்த போலீசார் அனுமதி அளித்திருந்தனர். அதன்படி மயிலாடுதுறை நகரில் காமராஜர் சாலை, கீழ நாஞ்சில் நாடு, மன்னம்பந்தல், மாயூரநாதர் மேலவீதி உட்பட 17 இடங்களில் விநாயகர் சிலை வைத்து வழிபட போலீசார் அனுமதி அளித்திருந்தனர். காமராஜர் சாலையில் கண்கொடுத்த பிள்ளையார்கோவில் வாசலில் வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலையை பா. ஜனதா தமிழக மேலிட பார்வையாளர் சுதாகர்ரெட்டி நேரில் வந்து வழிபட்டார். அப்போது அவருடன் மத்திய அரசின் சென்னை ஐகோர்ட்டு தலைமை வக்கீல் ராஜேந்திரன், பா.ஜனதா மாவட்ட தலைவர் வெங்கடேசன், நகர தலைவர் மோடி கண்ணன் மற்றும் நிர்வாகிகள் இருந்தனர். மயிலாடுதுறை மாவட்டத்தில் , மயிலாடுதுறைசீர்காழி, குத்தாலம், தரங்கம்பாடி ஆகிய தாலுகா பகுதிகளில் மொத்தம் 17 இடங்களில் விநாயகர் சிலை பொது இடத்தில் வைத்து வழிபட அனுமதிக்கப்பட்டது. அனுமதிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்ட விநாயகர் சிலைகள் அருகில் உள்ள நீர்நிலைகளில் கரைக்கப்பட்டன. விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டு இருந்த இடங்களில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். மயிலாடுதுறை தெற்கு அரண்மனை தெருவில் மேதா கணபதி கோவிலில் விநாயகர் சதுர்த்தி விழா நடந்தது. விழாவையொட்டி விநாயகருக்கு வெள்ளிக் கவசம் அறிவிக்கப்பட்டது. பின்னர் கொழுக்கட்டைகள் வைத்து சிறப்பு வழிபாடு செய்யப்பட்டது. இதில் தருமபுர ஆதீனம் 27 வது குருமகாசன்னிதானம் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கலந்துகொண்டு சிறப்பு தரிசனம் செய்தார். தொடர்ந்து அவர் பக்தர்களுக்கு ஆசி வழங்கினார். மேலும் மயிலாடுதுறை பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட விநாயகர் கோவில்களில் விநாயகர் சதுர்த்தி விழா நடந்தது. விழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.



திருவாவடுதுறையில் மனைவி இறந்த சோகத்தில் கணவரும் உயிரிழந்தார். சாவிலும் இணைப்பிரியாத தம்பதியால் கிராமமே சோகத்தில் மூழ்கியது. மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் தாலுகா திருவாவடுதுறை ஊராட்சி டி. மேலக்கடை முடுக்குத் தெருவைச் சேர்ந்தவர் கலியபெருமாள் வயது(88) இவருடைய மனைவி மாரியம்மாள் (82) இவர்களுக்கு திருமணாகி 60 ஆண்டுகள் ஆகிறது. இந்த தம்பதிக்கு 3 மகள்களும், 2 மகன்களும் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் திருமணம் செய்து வைத்த தம்பதிகள் மகிழ்ச்சியாக மூத்த மகன் செழியன் பாதுகாப்பில் வாழ்ந்து வந்தனர். இந்த நிலையில் வயது மூப்பின் காரணமாக உடல்நலக்குறைவு ஏற்பட்டு மாரியம்மாள் இரவு 11.30 மணியளவில் உயிரிழந்தார். 60 ஆண்டுகளுக்கும் மேலாக தன்னுடன் குடும்பம் நடத்தி வந்த தனது மனைவியை பிரிந்த துக்கம் தாங்காமல் கலியபெருமாள் அடுத்த சில மணி நேரங்களிலேயே மயங்கி விழுந்து உயிரிழந்தார். இதனையடுத்து உறவினர்கள் மற்றும் கிராமமக்கள் சேர்ந்து இறந்த தம்பதியினருக்கு முறைப்படி இறுதிசடங்கு செய்து இருவரின் உடல்களும் தகனம் செய்யப்பட்டது. மனைவி இறந்த துக்கத்தில் கணவனும் உயிரிழந்து சாவிலும் இணைப்பிரியாத தம்பதியால் திருவாவடுதுறை கிராமமே பெரும் சோகத்தில் மூழ்கியுள்ளது.

## தரங்கம்பாடி: ஆந்திர மீனவர்கள் பறிமுதல் செய்த இழுவை விசைப்படகை மீட்பு.!



ஜிபிஎஸ் கருவி பழுதடைந்ததால் வழிதவறிச் சென்ற தமிழக மீனவர்களிடம் இருந்து ஆந்திர மீனவர்கள் பறிமுதல் செய்த இழுவை விசைப்படகை இரண்டு மாதங்களுக்குப் பிறகு மீட்டுக் கொண்டு வந்த தரங்கம்பாடி மீனவ பஞ்சாயத்தார். மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி மீனவ கிராமத்தை சேர்ந்தவர் செல்லக்கண்ணு மகன் பிரபு (39) இவர் கடந்த ஜுலை 12 ஆம் தேதி மீனவர்கள் 9 பேருடன் காரைக்கால் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க 240 சிசி திறன் கொண்ட இழுவை விசைப்படகில் கடலுக்கு சென்றுள்ளனர். அப்போது ஜிபிஎஸ் கருவி பழுதடைந்ததால் திசைமாறி ஆந்திர கடல் பகுதிக்கு சென்ற படகினை ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டம் சீனிவாசபுரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் சிறை பிடித்தனர். தகவலறிந்த தரங்கம்பாடி மீனவ பஞ்சாயத்தார் மீன்வளத்துறை அதிகாரிகளின் உதவியுடன் ஆந்திர மாநிலத்திற்கு சென்று, மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, மீனவர்கள் 9 பேரையும் மீட்டு கொண்டு வந்தனர். ஆனால் பறிமுதல் செய்யப்பட்ட படகினை விடுவிக்க ஆந்திர மீனவர்கள் மறுத்து அப்படகினை கிருஷ்ணாம்பட்டினத்தில் உள்ள தனியார் துறைமுகத்தில் கொண்டு சென்று நிறுத்தினர். இதையடுத்து தரங்கம்பாடி மீனவ கிராம பஞ்சாயத்தார் தமிழக அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து, கடந்த திங்கள்கிழமை மீண்டும் ஆந்திரா சென்று மாவட்ட ஆட்சியரின் மூலம் பேச்சுவார்த்தை நடத்தி செவ்வாய்க்கிழமை அந்த படகினை தரங்கம்பாடி துறைமுகத்துக்கு கொண்டு வந்தனர். ஆனால் படகில் வைத்திருந்த வலைகள், பேட்டரி, டீசல் உள்ளிட்ட ரூ20 லட்சம் மதிப்பிலான அனைத்து பொருட்களையும் ஆந்திர மீனவர்கள் எடுத்துக் கொண்டதாக குற்றம்சாட்டியுள்ள தரங்கம்பாடி மீனவர்கள் தமிழக அரசு இப்பிரச்னையை மனிதாபிமானத்தோடு அணுகி, பாதிக்கப்பட்ட மீனவருக்கு இழப்பீட்டு தொகையை பெற்றுத் தர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மயிலாடுதுறையில் மருத்துவர், செவிலியர்களுக்கு சேவை செம்மல் விருது..!



மயிலாடுதுறை சென்ட்ரல் ஷைன் லயன்ஸ் சங்கம் சார்பில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றிவரும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. சங்கத்தலைவர் தாமரைச்செல்வி தலைமை வகித்தார். அரசு மருத்துவ அதிகாரி ரவிக்குமார், லயன்ஸ் மாவட்ட தலைவர் மோகன்ராஜ், மண்டல தலைவர் மதியரசன், மயிலாடுதுறை சென்ட்ரல் லயன்ஸ் தலைவர் சிவலிங்கம், ஷைன் லயன்ஸ் சங்க செயலாளர் வேல்விழி, பொருளாளர் மஹாலெட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கொரோனா பெருந்தொற்று காலத்தில், கர்ப்பிணி பெண்கள், குழந்தைகள் மற்றும் பொதுமக்களுக்கு தன்னலம் பாராமல் தியாக உணர்வோடு மருத்துவ சிகிச்சை அளித்த மயிலாடுதுறை நகர ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு சென்ட்ரல் ஷைன் லயன்ஸ் சங்கம் சார்பில் சேவை செம்மல்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதில் சுகாதாரத்துறை அதிகாரிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், லயன்ஸ் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**வேலைக்கு ஆட்கள் தேவை**

பிரபல பிரிண்டிங் நிறுவனத்திற்கு அலுவலக பணிக்கு ஆட்கள் தேவை..

இடம்:மயிலாடுதுறை

தொடர்புக்கு..

**9597887847**

## மயிலாடுதுறை: ரயிலில் கொண்டுவரப்பட்ட கிலோ தங்க நகைகள் பறிமுதல்..!



மயிலாடுதுறை ரயில் நிலையத்தில் உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துவரப்பட்ட 1.6 கிலோ தங்க நகைகள் பறிமுதல் செய்யப்பட்டது. இதுதொடர்பாக ரயில்வே பாதுகாப்பு படை போலீசார் மற்றும் வணிக வரித்துறையினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர். சென்னையிலிருந்து திருச்சி செல்லும் சோழன் எக்ஸ்பிரஸ் ரயில் மயிலாடுதுறை ரயில் நிலையத்திற்கு வந்தது. அப்போது ரயில்வே பாதுகாப்பு ஆய்வாளர் உதயச்சந்திரன் தலைமையிலான போலீசார் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகத்திற்கிடமான வகையில் ஒருவர் வைத்திருந்த பையை சோதனையிட்டனர். அதில், 1,600 கிராம் தங்க நகைகள் இருந்தது தெரியவந்தது. இதையடுத்து நகைகளுக்கு உரிய ஆவணங்கள் எதுவும் இல்லாத நிலையில், நகைகளை பறிமுதல் செய்து ரயில்வே பாதுகாப்பு படை காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தனர். பின்னர் நடைபெற்ற விசாரணையில் சென்னை சவுகார்பேட்டையைச் சேர்ந்த நகை வியாபாரி ரமேஷ்குமார் என்பவருக்குச் சொந்தமான நகை என்பதும் மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சை பகுதியில் கொடுக்க வந்ததும் தெரியவந்தது. இதனையடுத்து சென்னையிலிருந்து ரமேஷ்குமாரை வரவழைத்து அவரிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். விசாரணையில் 300 கிராம் தங்க நகைக்கு மட்டுமே ஆவணம் உள்ளது. மேலும் ரூபாய் 60 லட்சம் மதிப்புள்ள 1,300 கிராம தங்க நகை குறித்து திருச்சி வணிகவரித் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து மாநில வரி அலுவலர் ராஜசேகர் தலைமையிலான வணிக வரித்துறையினர் நேரில் வந்து ரமேஷிடம் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## ஜோதி பவுண்டேஷன் சார்பில் பனை விதை நடும் விழா..!



மயிலாடுதுறை: சீர்காழி அருகே கிளை வாய்க்கால்கள் தூர்வாரப்படாததால் சம்பா சாகுபடியை தொடங்க முடியாமல் விவசாயிகள் தவிப்பு! . விரைந்து தூர்வார விவசாயிகள் கோரிக்கை! மயிலாடுதுறை மாவட்டம் சீழ்காழி அருகே கிளை வாய்க்கால்கள் தூர்வாரப்படாததால் சம்பா சாகுபடியை தொடங்க முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். கடற்கரையையொட்டிய வடகால், ஆமைபள்ளம், கடவசால் உள்ளிட்ட பகுதிகளில் மேட்டூர் அணையின் நீரை நம்பியே சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். ஆனால் பாசன வாய்க்கால்கள் தூர்வாரப்படாததால் தற்போது சாகுபடி செய்யமுடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். எனவே கடைமடை பகுதிக்கு தண்ணீர் வருவதை அதிகாரிகள் உறுதி செய்ய கோரிக்கை விடுத்துள்ளனர்.

அகர முதல
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு
Aagaramuthalaa
தொடர்புக்கு
9597887847
8870884969
aagaramuthalaa@gmail.com

**வாடகைக்கு கடை தேவை: 8610255229**




# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa | www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



# கடலூர் மாவட்ட செய்திகள்

## கடலூரில் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்



கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணம், ஸ்ரீ பூவராக சுவாமி திருக்கோயில் வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கி.பாலசுப்ரமணியம், தலைமையில் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் மா.செ.சிந்தனைசெல்வன் முன்னிலையில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமினை தொடங்கிவைத்தார். அமைச்சர், தமிழ்நாடு முதலமைச்சர் கொரோனா நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விதமாக தமிழகத்தில் தற்போது கொரோனா தொற்று குறைந்துள்ளது. மேலும் கொரோனா பரவலை கட்டுப்படுத்த மக்கள் நலன் கருதி பல்வேறு தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. கொரோனா தொற்றினை முற்றிலும் கட்டுப்படுத்தும் விதமாக தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிற்கிணங்க 12/09/2021 மாநிலம் முழுவதும் ஒரே நாளில் 20 இலட்சத்திற்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு மாபெரும் தடுப்பூசி முகாம் நடைபெற் இதன்படி கடலூர் மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் பள்ளி கல்லூரி வளாகங்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகிய இடங்களில் தடுப்பூசி மையங்கள் அமைக்கப்பட்டு 1 இலட்சத்து 70 ஆயிரம் நபர்களுக்கு தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை முகாம்கள் நடைபெறவுள்ளது. கடலூர் மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் நடைபெறும் மாபெரும் தடுப்பூசி முகாமில் மருத்துவதுறையினரோடு இணைந்து வருவாய்துறை, ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, கல்வித்துறை, சத்துணவு துறை, காவல்துறை, தொழிலாளர் நலத்துறை உள்ளிட்ட அனைத்து துறைகள் இணைந்து செயல்படுகிறார்கள். இத்தடுப்பூசி போட்டுக்கொள்வதால் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் உள்ளிட்ட இணை நோய் உள்ளவர்களுக்கு எவ்வித பக்க விளைவுகளும் ஏற்படாது. எனவே 18 வயதிற்கு மேற்பட்ட அனைத்து விடுபட்ட தகுதியான பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி தடுப்பூசி செலுத்திக்கொள்ளவேண்டும். இக்கூட்டத்தில் சார் ஆட்சியர், சிதம்பரம் மதுபாலன், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள்) மரு.மீரா, வட்டார மருத்துவ அலுவலர் மரு.வெங்கடேசன், செயல் அலுவலர் பேரூராட்சி) மாதேஸ்வரன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், மருத்துவர்கள், பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பரங்கிப்பேட்டை பேரூராட்சியில் நீர் விளையாட்டு வளாகம் திறப்பு

### பரங்கிப்பேட்டை பேரூராட்சியில் நீர் விளையாட்டு வளாகத்தினை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்.



கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை பேரூராட்சியில் மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித்தலைவர், கி.பாலசுப்ரமணியம் தலைமையில் நீர் விளையாட்டு வளாகத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். கடலூர் மாவட்டம், அண்ணாமலை பல்கலைகழகமும், பரங்கிப்பேட்டை பேரூராட்சியும் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து பொதுமக்கள் பயன்படும் வகையில் நீர்விளையாட்டு வளாகத்தை வெள்ளாற்றங்கரையில் உள்ள கடல்வாழ் உயராய்வு மையத்தின் முன்பகுதியில் அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் பரங்கிப்பேட்டை பேரூராட்சியின் பொதுநிதியின் மூலம் 58.80 இலட்சம் மதிப்பீட்டில் நீர் விளையாட்டு உபகரணங்களான கயாக்ஸ், கேனோஸ், துடுப்பு படகு, உயிர்காக்கும் படகுகள் மற்றும் பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளுடன் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள நீர்விளையாட்டு வளாகத்தை மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர்நலன் துறை அமைச்சர் 12/09/2021 திறந்து வைத்து படகு சவாரியை கொடியசைத்து துவக்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சி.சக்திகணேசன், கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி) திட்ட இயக்குநர் பவன்குமார் ஜி, கிரியப்பனவர், சார் ஆட்சியர் சிதம்பரம் மதுபாலன், டாக்டர் ஆர்.ஞானதேவன், பதிவாளர் அண்ணாமலை பல்கலை கழகம், பேராசியர் டாக்டர்.பாலாஜி சுவாமிநாதன் அண்ணாமலை பல்கலை கழகம், மு.ஆறுமுகம் பி.ஏ.பி.எல், செயல் அலுவலர் பரங்கிப்பேட்டை பேரூராட்சி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கடலூர் பெருநகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்துவது குறித்து முதல் கருத்து கேட்புக்கூட்டம்



கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கடலூர் பெருநகராட்சியை மாநகராட்சியாகவும், வடலூர் மற்றும் திட்டக்குடி பேரூராட்சியை நகராட்சியாகவும் தரம் உயர்த்துவது குறித்து முதல் கருத்து கேட்புக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கி.பாலசுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது கடலூர் பெருநகராட்சியை மாநகராட்சியாகவும், வடலூர் மற்றும் திட்டக்குடி பேரூராட்சியை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்படும்போது மக்களுடைய பொருளாதார நிலை மற்றும் வாழ்க்கைத்தரம் உயரும், எனவே அனைத்து தேர்வு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் கலந்தாலோசித்து கருத்துக்களை இரண்டாம்கட்ட கூட்டத்தில் தெரிவிக்கலாம் எனவும், மேற்படி தங்களது கருத்துக்களை எழுத்துபூர்வமாக தெரிவிக்கும்படியும் அவ்வாறு தெரிவித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். மேலும் கிராம ஊராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்துதல் தற்போது பதவி வகிக்கும் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு எவ்வித இடையூறும் தங்களது பதவி காலத்தில் 5 ஆண்டுகள் ஏற்படாது என்பதை உறுதிபட தெரிவித்தார். இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சி.சக்திகணேசன், கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி/திட்ட இயக்குநர் பவன்குமார்ஜி, கிரியப்பனவர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ,வளர்ச்சி) மல்லிகா, துணை இயக்குநர்கள் ஊராட்சிகள் கண்ணன், பிரபாகரன், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், தன்னார்வல தொண்டு நிறுவனங்கள், குடியிருப்போர் நலச்சங்கங்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## மங்கலம்பேட்டையில் தடையை மீறி விநாயகர் சிலையை பிரதிஷ்டை



விருத்தாசலம் அடுத்த மங்கலம்பேட்டை பேரூராட்சியில் ஆண்டுதோறும் விநாயகர் சதுர்த்தி விழா வெகுவிமரிசையாக கொண்டாடப்படும். இங்கு மங்கலம்பேட்டை மற்றும் சுற்றிலும் உள்ள கிராமப்புற பகுதிகளில் பிரதிஷ்டை செய்யப்படும் விநாயகர் சிலைகள் வாகனங்களில் ஏற்றி வைத்து, வீதிகள் தோறும் ஊர்வலமாக எடுத்து செல்லப்படும். ஆனால் தற்போது கொரோனா பெருந்தொற்று காலம் என்பதால், பொது இடங்களில் மக்கள் அதிகம் கூடுவதை தவிர்க்கும் வகையில் சதுர்த்தி விழாவுக்கு அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தது. இதில் பொது இடங்களில் சிலைகளை பிரதிஷ்டை செய்து வழிபடவும், ஊர்வலத்துக்கும் தடை விதிக்கப்பட்டு இருந்தது. இருப்பினும், நேற்று இந்து முன்னணி மற்றும் ஆன்மீக அமைப்புகள் சார்பில் மங்கலம்பேட்டை சிவன் கோவில் வீதியில் உள்ள இந்து முன்னணி நிர்வாகி ஒருவரின் இடத்தில் 5 அடி உயரம் உள்ள விநாயகர் சிலையை பிரதிஷ்டை செய்தனர். பின்னர் மதியம் அங்குள்ள ஏரியில் சிலையை கரைக்க சிறப்பு பூஜைகள் செய்து, மோட்டார் சைக்கிளில் ஏற்றி ஊர்வலமாக கொண்டு சென்றனர். தடையை மீறி சிலையை பிரதிஷ்டை செய்து, ஊர்வலமாக எடுத்து செல்லப்படுவது பற்றி அறிந்த மங்கலம்பேட்டை போலீசார் அங்கு விரைந்து சென்று விநாயகர் சிலையை கரைக்க 5 பேர் மட்டுமே செல்ல வேண்டும் என்று கூறினார்கள். ஆனால் அதை பொருட்படுத்தாத இந்து முன்னணியினர் அங்கிருந்து ஊர்வலமாக விநாயகர் சிலையை கொண்டு சென்றனர். அப்போது மங்கலம்பேட்டையில் உள்ள ஓட்டை பிள்ளையார் என்ற வரசித்தி விநாயகர் கோவிலில் சூடம் ஏற்றி தேங்காய் உடைப்பதற்காக சென்றனர். அங்கு அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தினர். இதனால் இந்து முன்னணியினருக்கும், போலீசாருக்கும் இடையே கடும் வாக்குவாதமும் தள்ளு முள்ளும் ஏற்பட்டது. தொடர்ந்து இந்து முன்னணியினர் தேங்காய் உடைத்து சூடம் ஏற்றி வழிபட்ட பின்பு விநாயகர் சிலையை ஊர்வலமாக கொண்டு சென்று ஏரியில் கரைத்தனர். இச்சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

## கடலூரில் விநாயகர் கோயில்கள்
# மூடப்பட்டதால் களையிழந்த விநாயகர் சதுர்த்தி



விநாயகர் சதுர்த்தி பண்டிகையை கடந்த ஆண்டு கொரோனா பரவல் காரணமாக கொண்டாட முடியாமல் போனது. இந்த ஆண்டும் கொரோனா பரவல் அதிகமாக உள்ள காரணம் காட்டி இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களில் கொண்டாட தடை விதித்தனர் இருப்பினும் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று பல மாநிலங்களில் விநாயகர் சதுர்த்தியினை கொண்டாட அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் தமிழகத்தில் இன்று நடைபெற்று வரும் விநாயகர் சதுர்த்தி தினம் கொண்டாடப்படும் நிலையில் விநாயகர் சிலைகளை பொதுவெளியில் வைக்க மற்றும் விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் சென்று நீர்நிலைகளில் கரைக்க தமிழக அரசு தடை விதித்துள்ளது. இந்நிலையில் கடலூரில் பொது இடத்தில் விநாயகர் சிலைகள் வைக்கவும், பொதுமக்கள் ஒன்றாக கூடி நீர்நிலைகளில் கரைக்கவும் அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது ஆனால் தனிநபர்கள் நீர்நிலைகளுக்கு சிலைகளை எடுத்து சென்று கரைப்பதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார். இவ்வாறாக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதினால் கடலூரில் இன்று விநாயகர் சதுர்த்தி விழா கலையிழந்து காணப்பட்டது. அதனால் இன்று மஞ்சக்குப்பம் பகுதியில் உள்ள பிரசித்தி பெற்ற ஷ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் மற்றும் புதுப்பாளையம் பகுதியில் உள்ள இரட்டை பிள்ளையார் ஆலயங்கள் இன்று திறக்கப்படாததால் மக்கள் ஏமாற்றம் அடைந்தனர் மற்றும் திருப்பாதிரிப்புலியூர் வளம்புரி விநாயகர் கோவில் மட்டும் திறக்கப்பட்டு இருந்தது. ஆனால் அங்கும் மக்கள் பெரிதளவில் வழிபாடு செய்ய வராததால் கோவில் கலையிழந்து காணப்பட்டது. சென்ற ஆண்டு கூட பெரிதளவில் கொண்டாட்டங்கள் இல்லை என்றாலும் கோவில்களில் மக்கள் வழிபாடு செய்தனர் ஆங்காங்கே ஒரு சில இடங்களிலாவது விநாயகர் சிலைகள் பொது இடங்களில் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டது, ஆனால் இந்த வருடம் விநாயகர் சதுர்த்திக்கு முண்பிலுறுந்தே தமிழக அரசு சிலைகள் செய்ய தடை விதித்தால் இன்று எங்கும் சிலைகள் வைக்காமல் அரசின் உத்தரவின் படி விநாயகர் சதுர்த்தியானது மிகவும் அமைதியான முறையில் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த முறை பெரிய அளவிலான விநாயகர் சிலைகளுக்கு அனுமதி இல்லாத காரணத்தினால் சிறிய விநாயகர் சிலைகளின் விற்பனை சிறப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது ஆனால் காலையிலிருந்து தற்பொழுது வரையில் வீடுகளில் வைத்து வழிபாடு செய்வதற்காக செய்யப்பட்ட சிறிய விநாயகர் சிலைகளும் பெரிதாக விற்பனை ஆகாத காரணத்தினால் வியாபாரிகளும் பெரும் கவலை அடைந்துள்ளனர். அரசின் உத்தரவின் படி விநாயகர் சதுர்த்தி திருவிழா அமைதியாக கொண்டாடப்பட்டு வந்தாலும், இதனால் விநாயகர் சிலை செய்பவர்கள் மற்றும் விநாயகர் சிலைக்கு என குடை, பெரிய விநாயகர் சிலைகளுக்கு மாலை செய்பவர்கள் மற்றும் சிலைகளுக்கு பிரசாதம் செய்பவர்கள் என வெகுஜன மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனா பரவல் காரணமாக விநாயகர் சதுர்த்தி விழாவுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், விநாயகர் சிலை செய்யும் தொழிலில் ஈடுபட்டு வரும் 3000 தொழிலாளார்களுக்கு ஏற்கனவே 5000 ரூபாய் நிவாரணத்தொகை வழங்கப்பட்டு வரும் நிலையில், கூடுதலாக 5000 ரூபாய் என மொத்தம் 10ஆயிரம் வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடலூர்: கள்ளக்காதலுக்கு இடையூறு.. 12 வயது சிறுவனுக்கு சூடு வைத்த தாய்



கடலூர் அடுத்த சூரப்ப நாயக்கர் சாவடியில் 12 வயது சிறுவனை அவரது தாய் கை கால்களை கட்டி போட்டு சூடு வைத்து கொடுமைப்படுத்துவதாக கடலூர் திருப்பாதிரிப்புலியூர் காவல்துறையினருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற திருப்பாதிரிப்புலியூர் காவல்துறையினர் சிறுவனை மீட்டு விசாரணை மேற்கொண்டதில் சிறுவனின் தாய் விழுப்புரம் மாவட்டம் செஞ்சியைச் சேர்ந்த சாந்தி தேவி, தந்தை ஹரிகிருஷ்ணன் என்பதும் தெரியவந்தது. இதில் ஹரிகிருஷ்ணன் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டதாக சொல்லப்படுகிறது. இந்நிலையில் சாந்தி தேவிக்கு காலில் நரம்பு கோளாறு காரணமாக தன்னை சித்த மருத்துவர் எனக் கூறிக் கொள்ளும் சிதம்பரத்தைச் சேர்ந்த சுகைல் அகமது என்பவரிடம் சிகிச்சை பெற்று வந்தார். அப்போது இருவருக்கும் கள்ளக்காதல் . ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறதுஇந்நிலையில் சிறுவன், சாந்தி தேவி, கள்ளக்காதலன் சுகைல்அகமது ஆகியோர் கடலூர் சூரப்பநாயக்கர் சாவடியில் வாடகை வீட்டில் வசித்து வந்தனர். இந்நிலையில் சாந்தி தேவி சுகில்அகமது இருவருக்குமான கள்ளக்காதலுக்கு இடையூறாக இருந்ததாக கூறி அந்த சிறுவனை நாள்தோறும் அடித்தும் சூடு வைத்தும் உணவு கொடுக்காமலும் கொடுமைப்படுத்தி வந்துள்ளதாக தெரிகிறது. இந்த நிலையில் ஒரு கட்டத்தில் அந்த சிறுவனை பெற்ற மகன் என்றும் பாராமல் சாந்திதேவி வெளியே அனுப்பிவிட்டார். இதனால் சிறுவன் செல்ல வழியின்றி இரண்டு மூன்று நாட்கள் பசியுடன் வீதிகளில் சுற்றித் திரிந்து பின்னர் மீண்டும் வீட்டிற்கு சென்ற போது இந்த கொடுமையே தொடர்ந்து நடைபெற்றது. சிறுவனுக்கு ஆங்காங்கே சூடு இருந்ததை பார்த்த அக்கம்பக்கத்தினர் அந்த சிறுவனை அழைத்து விசாரித்த போது கேட்ட அவர்களிடம் நடந்தவற்றை கூறியதை பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர். பின்னர் காவல்துறையில் புகார் அளித்ததை அடுத்து சம்பவ இடத்திற்கு வந்த திருப்பாதிரிப்புலியூர் காவல் துறையினர் விசாரணைக்காக வந்தனர். திருப்பாதிரிப்புலியூர் காவல்துறையினர் சிறுவன் அவரது தாய் மற்றும் அவருடன் திருமணத்தை மீறிய உறவில் இருந்த சுகில் அகமது ஆகியோரை காவல் நிலையம் அழைத்து சென்று இருவர் மீதும் 6 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து சிறையில் அடைத்தனர். மேலும் சிறுவனை பாதுகாப்பாக குழந்தைகள் பாதுகாப்பு மையத்தில் தங்க வைக்க ஏற்பாடு செய்துள்ளனர். ஏற்கெனவே செஞ்சி அருகே கள்ளக்காதலுக்கு இடையூறாக இருந்த 2 வயது மகனை பெற்ற தாய் துளசியே கொடூரமாக தாக்கி அதை வீடியோ எடுத்து கள்ளக்காதலனுக்கு அனுப்பிய விவகாரத்தில் இருவரும் கைது செய்யப்பட்ட நிலையில் தற்போது மீண்டும் ஒரு கொடூரம் நிகழ்ந்துள்ளது

## கடலூர்: 11 மையங்களில்
# நீட் தேர்வை 4,831 பேர் எழுதினர்.



கடலூர் மாவட்டத்தில் 11 மையங்களில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற. நீட் தேர்வை 4,831 பேர் எழுதினர். மாவட்டத்தில் கடலூர், நெய்வேலி, சிதம்பரம், விருத்தாசலம் ஆகிய இடங்களில் 11 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டன. தேர்வு மதியம் 2 மணிக்கு தொடங்கி மாலை 5 மணி வரை நடைபெற்றது. எனினும் காலை 11 மணி முதலே மாணவ, மாணவிகள் தேர்வு மையங்களுக்குள் அனுமதிக்கப்பட்டனர். தேர்வு மைய நுழைவு வாயிலில் மாணவ, மாணவிகள் மெட்டல் டிடெக்டர் உள்ளிட்ட பரிசோதனைகளுக்குப் பிறகே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். கடலூர் மாவட்டத்தில் இந்தத் தேர் வை எழுதுவதற்காக 5,024 பேர் விண்ணப்பித்தனர், 193 பேர் தேர்வில் பங்கேற்கவில்லை, 4,831 பேர் தேர்வை எழுதினர். இவர்களில் 471 பேர் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தேர்வு மையங்களில் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## ஸ்ரீ நந்தனார் கல்விக் கழகம் சார்பில் முன்னாள் எம்பி இளையபெருமாளின் 16 ம் ஆண்டு நினைவு நாள் விழா.



கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் ஸ்ரீ நந்தனார் கல்விக் கழகம் சார்பில் இளையபெருமாள் முன்னாள் எம்பி அவர்களின் 16 ம் ஆண்டு நினைவு நாள் விழா நடைபெற்றது. விழாவிற்கு கல்விக் கழகத்தின் மூத்த ஆலோசகர் கனகசபை தலைமை தாங்கினார். விழாவின் கல்வி கட்சியின் செயலாளர் அன்பழகன் டிரஸ்ட் செயலாளர் டிகே எம் வினோபா பொருளாளர் இளைய அன்பழகன் பன்னீர்செல்வம் உறுப்பினர்கள் மணிவேல் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் செந்தில்நாதன் மலர்தூவி மரியாதை செலுத்தினார். மாநில பொதுச்செயலாளர் பிபிகே சித்தார்த்தன் மாவட்ட செயலாளர் குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

அகர முதல
தொடர்புக்கு
9597887847
8870884969
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

அகர முதல
WE ARE HIRING!!!
வேலைக்கு ஆட்கள் தேவை
பிரபல பிரிண்டிங் நிறுவனத்திற்கு
அலுவலக பணிக்கு ஆட்கள் தேவை..
இடம்:மயிலாடுதுறை
தொடர்புக்கு..
9597887847
விளம்பர தொடர்புக்கு
8870884969

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969